## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.1, SALEM**

வழக்கு எண் : CC.659/2023

வழக்கு சாட்சி : **PW1** நாள் **14.03.2024**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | திரு. கார்த்திக் | ஜாதி | : | |
| த/க. பெயர் | திரு.ரங்கநாதன் | தொழில் | : | |
| கிராமம் | : | சமயம் | : | |
| தாலுக்கா | : | வயது | : | |
| எதிரிகள் ஆஜர். | | | | |

<u>முதல் விசாரணை:–</u>

நான் தற்போது ஆத்தோரம் மார்க்கெட் தெருவில் குடியிருந்து லாலா ஸ்வீட்சில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வெங்கடேஷ், பிரசாந்த் ஆகும். 03.04.2023 அன்று இரவு 09.30 மணியளவில் ஆத்தோரத்தில் நான் குடிபோதையில் இருந்தபோது, பாட்டிலால் தாக்கினார்கள். யார் தாக்கினார்கள் என்று தெரியாது. அதில் எனக்கு இடது பக்க மண்டையில் அடிப்பட்டது. சேலம், ஜிஹெச் சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். ஒயின்ஷாப்பில் குடித்துக்கொண்டிருந்த போது யாரோ தாக்கிவிட்டதாக போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். ஆனால் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. படித்து பார்க்காமல் கையெழுத்து செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த புகார் வாக்குமுலம் **அ.த.சா.ஆ–1** ஆகும். எதிரிகள் இருவரும் எனது நண்பர்கள் சம்பவத்தின் போது என்னுடன் தான் இருந்தார்கள். எதிரிகள் என்னை தாக்கவில்லை எனக்கு உதவியாக தான் இருந்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து, அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பில் விசாரணை:-</u>**

03.04.2023 அன்று இரவு 09.30 மணிக்கு எதிரிகள் இருவரும் தன்னை கெட்ட வார்த்தையால் திட்டி பீர் பாட்டிலால் அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாக புகார்வாக்குமூலத்திலும், போலீஸ் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு சமாதானம் ஆகிவிட்டதால் மாற்றி சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-Tmt.G.Kalaivani,
Judicial Magistrate No.1
Salem.

## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.1, SALEM**

வழக்கு எண் : CC.659/2023

வழக்கு சாட்சி : **PW2** நாள் **14.03.2024**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | திரு.ரவி | ஜாதி | : | |
| த/க. பெயர் | திரு. ராமன் | தொழில் | : | |
| கிராமம் | : | சமயம் | : | |
| தாலுக்கா | : | வயது | : | |
| எதிரிகள் ஆஜர். | | | | |

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ஆனந்தா இறக்கத்தில் குடியிருந்து எண்ணை மில்லில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 03.04.2023 அன்று இரவு 09.00 மணியளவில் எனது கடை முன்பு சண்டை நடந்ததாக கூறினார்கள் மறுநாள் காலை நான் பார்த்தபோது எனது கடை முன்பு உடைந்த பாட்டில்களும், இரத்த கரைகளும் இருந்தது. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்தார்கள். அதற்காக நான் சாட்சி கையெழுத்து செய்தேன் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ-2** ஆகும். என்னுடன் தேவராஜ் என்பவரும் கையெழுத்து செய்தார்.

**எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்குறுக்கு விசாரணை:-**

Sd/-Tmt.G.Kalaivani,
Judicial Magistrate No.1
Salem.

## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.1, SALEM**

வழக்கு எண் : CC.659/2023

வழக்கு சாட்சி : **PW3** நாள் **14.03.2024**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | திரு.தேவராஜ் | ஜாதி | : | |
| த/க. பெயர் | திரு. ஐய்யப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | சமயம் | : | |
| தாலுக்கா | : | வயது | : | |
| எதிரிகள் ஆஜர். | | | | |

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது காசி முனியப்பன் கோவிலில் குடியிருந்து எண்ணை மில்லில் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 03.04.2023 அன்று இரவு 09.00 மணியளவில் எனது கடை முன்பு சண்டை நடந்ததாக கூறினார்கள் மறுநாள் காலை நான் பார்த்தபோது எனது கடை முன்பு உடைந்த பாட்டில்களும், இரத்த கரைகளும் இருந்தது. போலீசார் காலை 10.00 மணிக்கு வந்து நடந்த சம்பவத்தை பற்றி விசாரித்தார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து விசாரித்தார்கள். அதற்காக நான் சாட்சி கையெழுத்து செய்தேன் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ-3** ஆகும். என்னுடன் ரவி என்பவரும் கையெழுத்து செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்குறுக்கு விசாரணை:-</u>**

Sd/-Tmt.G.Kalaivani,
Judicial Magistrate No.1
Salem.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.1, SALEM**

வழக்கு எண்  : CC.659/2023

வழக்கு சாட்சி : **PW4**  நாள் **14.03.2024**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | திரு.அருள் | ஜாதி | : | |
| த/க. பெயர் | திரு. முருகேசன் | தொழில் | : | |
| கிராமம் | : | சமயம் | : | |
| தாலுக்கா | : | வயது | : | |
| எதிரிகள் ஆஜர். | | | | |

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேர்மேன் ராஜரத்தினம் தெருவில் குடியிருந்து எலக்ட்ரிகல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 03.04.2023 அன்று இரவு 09.30 மணியளவில் அ.சா.1 கார்த்திக்கிற்கு மண்டையில் அடிப்பட்டு இரத்த காயத்துடன் எனது கடைக்கு வந்தார். தன்னை பாட்டிலால் அடித்துவிட்டதாக கூறினார். ஆனால் யார் அடித்தார் என்று கூறவில்லை. ஒயின்ஷாப் பக்கத்திலுள்ள எண்ணை கடை அருகில் தகராறு நடந்ததாக கூறினார். 2 நபர்கள் அடித்ததாக கூறினார். அடிப்பட்ட அ.சா.1 சேலம் ஜி.ஹெச்சிற்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். யார் புகார் கொடுத்தார் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்குறுக்கு விசாரணை:-**

Sd/-Tmt.G.Kalaivani,
Judicial Magistrate No.1
Salem.